பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

24 07 2024 — 6 45
புதன்கிழமை — காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட் இந்திய பொருளாதாரத்தையும், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பையும் அதிகரிக்கச் செய்யும் சிறப்பான பட்ஜெட் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
2. ரயில்வே துறைக்கு மத்திய பட்ஜெட்டில் இரண்டு லட்சத்து 62 ஆயிரத்து 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
3. சென்னை கிண்டியில் உள்ள உயர் சிறப்பு மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.
4. தமிழகத்தில் தற்போது மிகக்குறைந்த அளவே மின் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதாக மாநில மின்துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.
5. ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் நேபாள அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 82 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்று அரை இறுதிக்கு முன்னேறியது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

நாடாளுமன்றத்தில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட் இந்திய பொருளாதாரத்தையும், இளைஞர்களின் சக்தியையும் ஒருங்கிணைக்கக்கூடிய சிறப்பான பட்ஜெட் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் சுமார் நான்கு கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டிற்காக இரண்டு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது என்று கூறியுள்ளார்.

சுமார் மூன்று கோடி வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முத்ரா கடன் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் கடனுதவி பத்து லட்சம் ரூபாயிலிருந்து 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதற்கு பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு தாம் நன்றி தெரிவிப்பதாகவும் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

[]<<<>>>[]

நாட்டின் நீண்டகால வளர்ச்சியை உறுதிப்படுத்தவும், உடனடி தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்திலும் மத்திய பட்ஜெட் அமைந்துள்ளதாக பிஜேபி தலைவரும், மத்திய சுகாதாரதுறை அமைச்சருமான திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முக்கிய துறைகளில் முதலீட்டை அதிகரிப்பது உள்ளிட்ட கொள்கை மாற்றங்கள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என்றும், அதிக அளவிலான வேலை வாய்ப்புகள் உருவாகும் என்று கூறினார்.

இளைஞர்கள், பெண்கள், ஏழைகள், விவசாயிகள் மற்றும் சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் வளர்ச்சியை உறுதி செய்யும் விதத்தில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

[]<<<>>>[]

ரயில்வே துறைக்கு மத்திய பட்ஜெட்டில் இரண்டு லட்சத்து 62 ஆயிரத்து 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இது ரயில்வேத் துறையை மேலும் மேம்படுத்தும் என்று அவர் கூறியுள்ளார்.

ரயில்வே பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு லட்சத்து எட்டாயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயணிகளின் வசதிகள் மற்றும் பாதுகாப்புக்காக கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும், ரயில்வே கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் திட்டங்கள் வரையப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறைக்கும் பொறுப்பு வகிக்கும் திரு அஸ்வினி வைஷ்ணவ், தொலைத் தொடர்பு கருவிகளுக்கு சுங்க வரி குறைக்கப்பட்டுள்ளதன் மூலம், மின்னணு துறை மேலும் வளர்ச்சியடையும் என்று தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

இளநிலை மருத்துவ படிப்புக்கு இந்த ஆண்டு நடத்தப்பட்ட நீட் தேர்வுக்கு மறு தேர்வு நடத்த தேவையில்லை என்ற உச்சநீதிமன்றத்தின் உத்தரவை தாம் வரவேற்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய தேர்வுகள் முகமை நடத்தும் தேர்வுகள் எவ்வித முறைகேட்டிற்கும் இடமின்றி வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்படுவதாகக் கூறினார்.

நீட் தேர்வில் முறைகேட்டில் ஈடுபட்டதாக தெரிய வரும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

தேசிய தேர்வுகள் முகமையை முற்றிலும் மாற்றியமைப்பதற்கு உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த குழு நிபுணர்களின் கருத்துக்களை கேட்டு அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களை குழப்பும் வகையில் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி கருத்துக்களைத் தெரிவித்து வருவதாகவும், நாட்டின் கல்வித்துறை மீது அவர் களங்கம் ஏற்படுத்தி வருவதாகவும் திரு தர்மேந்திரபிரதான் குற்றம்சாட்டினார்.

**[]<<<>>>[]**

தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் சென்னை கிண்டியில் அமைந்துள்ள உயர் சிறப்பு மருத்துவமனைக்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த மருத்துவமனையில் அவசர பிரிவில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளை சந்தித்து உடல்நலன் குறித்து விசாரித்தார்.

இதய சிகிச்சை பிரிவின் ஆய்வகத்திற்குச் சென்று மருத்துவ வசதிகள் குறித்தும் நோயாளிகளிடம் கேட்டறிந்தார்.

நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தையும் திரு மு க ஸ்டாலின் ஆய்வு செய்தார்.

அதிக எண்ணிக்கையில் நோயாளிகள் வருவதால் கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பராமரிப்பு பணியாளர்களை நியமிக்குமாறு அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் தற்போது மிகக்குறைந்த அளவே மின் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதாக மாநில மின்துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட உதய் மின் திட்டத்தின் ஒப்பந்த அடிப்படையிலேயே மின் கட்டண உயர்வு செய்ய வேண்டிய நிர்பந்தம் மாநில மின் பகிர்மான கழகத்திற்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - தங்கம் தென்னரசு ) -32--- செகண்ட்*

**[]<<<>>>[]**

அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணி முருகன் திருக்கோவிலில் ஆடிக் கிருத்திகை விழாவுக்கான ஏற்பாடுகள் குறித்து மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர்பாபு, கைத்தறித்துறை அமைச்சர் திரு காந்தி ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆடிக் கிருத்திகையின் ஒரு பகுதியாக ஐந்து நாட்கள் நடைபெறும் தெப்பத்திருவிழாவில் லட்சக்கணக்கானோர் பங்கேற்க உள்ளதையடுத்து அங்கு குடிநீர், சுகாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்துத்துறை உயரதிகாரிகளுடன் அமைச்சர்கள் ஆலோசனை நடத்தினர்.

இந்த விழா இம்மாதம் 27-ஆம் தேதி முதல் 31-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் குடிசைகளில் வசிக்கும் மக்களுக்காக வீடு கட்டித்தரும் திட்டத்தினை மாநில அரசு சிறப்பாக செயல்படுத்தி வருவதாக உணவு அமைச்சர் திரு சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் கொழுமம் கொண்டான் ஊராட்சியில் ஆறரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமத்துவபுரம் கட்டும் பணிக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

அப்போது பேசிய அவர், கடந்த நிதி ஆண்டில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் எட்டு புதிய சமத்துவ புரங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

அனைத்து அடிப்படை வசதிகளுடன் சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் திரு சக்கரபாணி தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக திரு சி பெர்ணான்டஸ் ரத்தின ராஜா-வை தமிழக அரசு நியமித்துள்ளது.

முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவின்படி திரு சி பெர்னாண்டஸ் இப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக மாநில சிறுபான்மையினர் நலத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

எத்தியோப்பியா நாட்டில் பெய்து வரும் கனமழை காரணமாக நேரிட்ட நிலச்சரிவில் 229 பேர் உயிரிழந்தனர்.

[]<<<>>>[]

முப்படை தளபதி ஜெனரல் அனில் சௌஹான், இஸ்ரேல் பாதுகாப்புத்துறை தலைமை இயக்குநர் திரு ஈ எல் ஜமீர்-ஐ சந்தித்து இருதரப்பு பாதுகாப்பு உறவுகள் குறித்து விவாதித்தனர்.

[]<<<>>>[]

மத்திய பட்.ஜெட்டில் ஜம்மு-கஷ்மீரின் வளர்ச்சிக்காக சுமார் 42 ஆயிரத்து 277 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீரில் தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட துப்பாக்கி சண்டையில் ராணுவ வீரர் ஒருவர் வீரமரணமடைந்தார்.

[]<<<>>>[]

மும்பை கப்பற்படை துறைமுகத்தில் ஐ என் எஸ் பிரம்மபுத்ரா கப்பலில் நேரிட்ட தீ விபத்து குறித்து விசாரணை நடத்தப்படும் என்று வைஸ் அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

வருமான வரி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

[]<<<>>>[]

கன்னியாகுமரி மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் குறித்து ஆட்சியர் திருமதி ஆர் அழகுமீனா நேற்று நுள்ளிவிளை ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளில் ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

சிவகங்கை மாவட்டத்தில் நிலக்கடலை பயிரிடும் விவசாயிகள் பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் செப்டம்பர் மாதம் 16-ஆம் தேதிக்குள் காப்பீடு செய்து கொள்ளுமாறு ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

கேரளாவில் நிபா வைரஸ் இருப்பதாக கூறப்படுவதையடுத்து, நீலகிரி மாவட்டத்தில் கேரள எல்லையையொட்டி உள்ள சோதனை சாவடிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

சென்னை மநாகராட்சிக்கு உட்பட்ட மூன்று மண்டலங்களில் தீவிர தூய்மைப் பணியின் போது 201 மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றப்பட்டன.

[]<<<>>>[]

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

இலங்கையின் தம்புலாவில் நேற்று நடைபெற்ற நேபாள அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய மகளிர் அணி 82 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 178 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய நேபாள அணி 20 ஓவரில் 98 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

இந்த போட்டியில் இந்தியா வெற்றிபெற்றதை அடுத்து அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

**[]<<<>>>[]**

ஆஸ்திரிய ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெறும் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் - ஸ்பெயினின் மார்ட்டினஸ்-ஐ எதிர்கொள்கிறார்.